# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,092 —1964 ජූලි 3 වැනි සිකුරාදා—1964.7.3

14,092 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு யூலை மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 183 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | 188 | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் | — | நாணுவிதம் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கொழும்புத் துறைமுக அதிகாரசபை

**இராணி எலிசபெத் மேடை உண்டிச்சாலை இல. 3**

மேற்படி உண்டிச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கானதாகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையுடன் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1964 ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

7–236—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

### கொழும்புத் துறைமுக அதிகாரசபை

**எலிசபெத் இராணி துறைமேடை உண்டிச்சாலை இல. 2**

மேற்படி உண்டிச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கானதாகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையுடன் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1964 ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

7–235—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

### கொழும்புத் துறைமுக அதிகாரசபை

**பிறின்ஸ் விஜயா துறைமேடைப் போசனசாலை**

மேற்படி போசனசாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கானதாகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையுடன் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1964 ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

7–233—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### செங்கலடி உப பிரிவு

ஆனைசுட்ட கட்டுக்குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதியளித்தல் (அங்கம் 1–10) பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஆடி மாதம் 21 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 42,000/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் செங்கலடி உப பிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1964 ம் ஆண்டு ஆடி மாதம் 17 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விவரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50/- ரூபா கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சு. இராசேந்திரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
செங்கலடி உப-பிரவு.

செங்கலடி உப-பிரிவு
1964 ஆம் ஆனி மீ 15 ந் வ.

7-5—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உப பிரிவு

கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரை கீழ்க்காணும் வேலைகட்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

அதன் பின்பு கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப்படும்.

| | பதிவுத் தொகை ரூபா. |
|---|---|
| (1) அலகொல்ல கெற்றியவெலதென்ன அணைக்கட்டு கட்டுதல் | 31,000/- |
| (2) நவன் எலிய அணைக்கட்டுத் திட்டம் கட்டுதல் .. | 22,000/- |

2. மேலே கொடுத்துள்ள வேலைகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்குமேலும், நீர்ப்பாசன திணைக்களத்தில் தேர்ச்சி பெற்ற வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட பதிவுகாரர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதி யுள்ளவர்கள்.

3. மாத்தளையிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1964 ம் ஆண்டு ஆடி மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளத்தக்க வெற்றுப்பத்திரங்களில் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் பெறவருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறவருவோர் கேள்விக்கட் டணமாக முதலாவது வேலைக்கு ரூபா 50/- ம் இரண்டாவது வேலைக்கு ரூபா 25/- ம் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அல்லது கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

4. கிராம அபிவிருத்திச் சங்கங்களும், கூட்டுறவுச் சபைகளும் கேள்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

5. இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். சீமெந்தும், பைப்புகளும் இக்கந்தோரால் கொடுக்கப் படும்.

செ. பூபாலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை உப பிரிவு

7-156—3. 7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

## வித்தியா பகுதி

### மாற்றுறுப்புக்களுடன் நுணுக்குக் காட்டிகள் (Microscopes with Spares) விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்

மாற்றுறுப்புக்களுடன் நுணுக்குக் காட்டிகள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை, 1964 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ந் திகதி மு.ப. 10.30 மணிவரை கொழும்பு 3, சேர் ஏணெஸ்ற் டி சில்வா மாவத்தையிலுள்ள கல்வி அமைச்சுக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பி லுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூ. 100/- கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1964 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஜே. ஏ. பர்னந்து,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 3 ந் திகதி.

7-117—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

## சுகாதாரத் திணைக்களம்

### சாமான்கள் ஏற்றி இறக்குதல்

1964 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள புகையிரத நிலையங்களிலிருந்து மருத்துவ நிலையங்களுக்கு சாமான்கள் ஏற்றி இறக்குவதற் குரியதும் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்தும் யாழ்ப்பாணப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் 1964 ம் ஆண்டு ஆவணி மாதம் 4 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்வார்.

2. 1964 ம் ஆண்டு ஆவணி மாதம் 4 ம் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாய் இருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது என் அதிகாரப் பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, புத்தளம், இரத்தினபுரி, வவனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையும் திகதிக்குமுன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 3 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ நேரத்துக்கு கொடுக்கத் தவறினால் கேள்விப்பத்திரம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம், என்ற முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக்கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்விக்காரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைக் குறிப்பாக கவனித்தல் வேண்டும் :—

(அ) ½ மைலும் அதுக்குக் கூடிய தூரமும் 1 மைலாகக் கணக்கிடப்பட்டு அதுக்குரிய கூலி கொடுக்கப்படும். ½ மைலுக்குக் குறைந்த தூரத்துக்கு உண்மையாகக் கடந்த தூரத்துக்கே கூலி கொடுக்கப்படும் ;

(ஆ) 1 தொன்னுக்குக் கூடிய பாரமுள்ள சாமான் ஏற்றி இறக்கினால் மாவட்ட காரியாதிகாரி சிபார்சு செய்யும் தொகையின்படியே அதற்குரிய கூலி வழங்கப்படும் ;

(இ) விண்ணப்பம் பாரம் எடுத்தபின் திறக்கப்படும் மருத்துவ நிலையங்களுக்கு ஏற்றியிறக்கும் சாமான்களுக்குரிய தொகை மாவட்ட காரியாதிகாரியின் தொகையின்படியே கூலி வழங்கப்படும்.

7. கேள்வி நிபந்தனைகள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைக்கிணங்க நடத்தல் வேண்டும்.

8. மற்றைய எந்த விபரங்களையும் யாழ்ப்பாணப் பகுதி சுகாதாரசேவை அத்தியட்சகருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒரு விண்ணப்பத்தையோ அல்லது எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமும் கொடுக்காமல் நிராகரிக்கும் உரிமை சுகாதார திணைக்களத்துக்கு உண்டு.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1964 ம் ஆண்டு ஆடி மீ 3 ந உ.

ஜீ. என். ஆர். நதானியல்ஸ்,
சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்.

### மேற் கூறப்பட்ட அட்டவணை

| 1<br>சேவை | 2<br>கேள்விப் பத்திர கட்டுப் பணம்<br>ரூ. ச. | 3<br>பிணை வைப்புப் பணம்<br>ரூ. ச. | 4<br>முடிவு திகதி |
|---|---|---|---|
| கீழ்க்காணும் புகையிரத நிலையங்களிலிருந்து மருத்துவ நிலையங்களுக்கு சாமான்கள் ஏற்றி இறக்குதல் :— | | | |
| (அ) பிரிவு : | | | |
| மான்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை, யானையிறவு, கொடிகாமம் | 100 0 | 400 0 | ஆவணி 4, 1964 காலை 10 மணி |
| (ஆ) பிரிவு : | | | |
| சாவகச்சேரி, நாவற்குளி, கொக்குவில் .. .. | 100 0 | 400 0 | ஆவணி 4, 1964 ,, |
| (இ) பிரிவு : | | | |
| இணுவில், சுன்னாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை .. | 100 0 | 200 0 | ஆவணி 4, 1964 ,, |

7—124—3.7.64 ந திகதிய வர்த்தமானி இல. 14,092

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராதபுரம் உப பிரிவு

ஏ.எல். 4.—கிரிகொல்லாவ குள வரம்பும் வலது கரைவான் திருத்தவேலை.

ஏ.எல். 5.—மூவத்துகமக் குள வரம்பும் இடவகரைவான் திருத்த வேலையும் வரம்பு போடுதலும் குடுகமகுளத் தண்ணீர் கொடுக்கும் வாயக்கால் திருத்தலும்.

ஏ.எல். 6.—மெக்கிச்சாவ குள வலது கரை வாய்க்கால்கள் (வாய்க்கால் 1 தொடக்கம் 5 வரை) நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் வேலைகள்.

ஏ.எல்.7.—மெக்கிச்சாவ குளத்தின் இடது கரைப்பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தல் இவைகளுக்கு.

2. அனுராதபுரத்திலுள்ள வடமத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஆடி மாசம் 28 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஏ. எல். 4 வேலைக்கு ரூபா 42,000 க்கும் அதற்கு மேலும், ஏ.எல். 5 வேலைக்கு ரூபா 45,000 க்கும் அதற்கு மேலும், ஏ.எல். 6 வேலைக்கு ரூபா 18,000 க்கும் அதற்கு மேலும், ஏ.எல்.7 வேலைக்கு ரூபா 16,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

4. இக்கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு ஆடி மாசம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பக்கத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை இவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரமனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் முதல் இரண்டு கேள்விப் பத்திரங்களுக்கு ரூபா 50/-, பின் இரண்டு கேள்விப்பத்திரங்களுக்கு ரூபா 25/- முறையே கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியிலோ அல்லது நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்திலோ கட்டினால் போதுமானது.

இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அனுராதபுரம் உப பிரிவு.

அனுராதபுரம்,
1964 ம் ஆண்டு ஆனி மீ 22 ந் உ.

7–219—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

## கடற்றொழிற் பகுதி

**காலி மாவட்டத்தில் தூவமோதரையில் மலசலகூடங்கள் இணைக்கப் பெற்ற 10 கடற்றொழிலாளர்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள்**

காலி மாவட்டத்தில் தூவமோதரையில் மலசலகூடங்கள் இணைக்கப் பெற்ற 10 கடற்றொழிலாளர்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள் கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதி கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1964 ம் ஆண்டு ஜுலை மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள, கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம், 1964 ம் ஆண்டு ஜுலை மாதம், 23 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1964 ம் ஆண்டு ஜூன் மீ 22 ந் உ.

7–72—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

நுவரெலியா நாலுகடவை காரியாதிகாரியின் பிரிவில் பங்களாகத்த குடியிருப்பில் குழாய் தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் அமைப்பதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 17 ந் திகதி பி.ப. 2.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரத்திற்கான வெற்றுப்பத்திரங்களை நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள உறையில் இடது மூலையில் பங்களாகத்த குடியிருப்பு குழாய் தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம் என்று எழுதப்பட்டு 1964 ம் ஆண்டு யூலை மாதம் 13 ம் திகதிக்கு முன்னதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்ப வேண்டும். கேள்விப்பத்திரங்களை நுவரெலியா கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுவதன் மூலமாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பலாம்.

5. கேள்விப் பத்திரத்திற்கான வெற்றுப் பத்திரங்களை நுவரெலியா கச்சேரிக்கு விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தகுந்த வெற்றுப்பத்திரத்திலல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வெற்றுப்பத்திரங்கள் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 13 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரைக்கும் நுவரெலியாக் கச்சேரியில் ரூபாய் ஐம்பது (ரூபா 50) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைக் கொடுப்பதன் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்விப்பத்திரத்தில் அழிக்கப்பட்டவை திருத்தப்பட்டவைக்கெல்லாம் கைச்சாத்திடப்படவேண்டும். கேட்கப்பட்ட கேள்வியின் தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். எழுத்திலுள்ள தொகையும் இலக்கத்திலுள்ள தொகையும் வித்தியாசப்பட்டால் அல்லது தொகை எழுத்தில் மட்டும் தரப்பட்டிருந்தால் எழுத்திலுள்ள தொகையே ஏற்றுக்கொள்ளப்படும்.

7. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவித்தல் கொடுக்கப்பட்டு ஒரு கிழமைக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறினாலோ அல்லது தேவையான பிணைவைப்புப் பணம் கட்டத்தவறினாலோ ஒப்பந்தக்காரர் கட்டுப்பணத்தை முடிக்கு இழக்க நேரிடும். கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று சித்தியெய்தியவரின் முகவரிக்கு அறிவித்தல் பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்பட்டால் அவர் அதைப் பெற்றுக் கொண்டார் என்பதாகும்.

8. ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்றுவதற்காக சித்தியடைந்த கேள்விக்காரர் பிணைவைப்புப் பணம் கட்டவேண்டும். இத்தொகை கேட்கப்பட்ட கேள்வியில் 10 சதவீதமாகும்.

9. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றத் தவறினால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படக்கூடும்.

10. கேள்விப்பத்திரம் முழுதையுமோ இல்லாவிடில் பகுதியையோ நிராகரிப்பதற்கும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளவோ நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு உரிமையுண்டு.

11. கேள்விப்பத்திரகாரர் மற்ற அரசாங்கக் காரியாலயங்களில் ஒப்பந்தங்கள் நிறைவேற்றியிருந்தால் அக்காரியாலயங்களின் பெயர்களையும் வேலைகள் நிறைவேற்றப்பட்ட மாவட்டங்களையும் குறிப்பிட வேண்டும்.

12. சித்தியடைந்த கேள்விக்காரர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு வேண்டிய முத்திரைச் செலவைச் செலுத்த வேண்டியவராவார்.

13. இவ்வேலை சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை நுவரெலியாக் கச்சேரியிலுள்ள காணிக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

14. 1964 ம் ஆண்டு யூலை 17 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரகாரர் விரும்பினால் சமூகமளிக்கலாம்.

ரி. எச். டபிள்யு. வவுட்டஸ்,
நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

நுவரெலியாக் கச்சேரி,
1964 ம் ஆண்டு யூன் மீ 23 ந் உ.

7–65—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

## சௌக்கிய திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1964 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் செப்டம்பர் மாதம் 30 ந் திகதி 1965 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லாத இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம், ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்கச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினல் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாயவிரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

புத்தளம்,
20.6.64

வி. அ. பொன்சேகா,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| தாபனங்கள் புத்தளப் பகுதி | கேள்வுக் கட்டுப்பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள் — மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | நோயாளிகள் — மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | பால் உணவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | | | | | | | | | |
| ஆனமடுவ வைத்தியசாலை | 100 | 800 | 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ம் திகதி காலை பத்து மணிக்கு | 300 | 300 | 300 | 1,250 | 2,400 | 2,400 | 2,400 | 9,600 | — |
| டங்கொட்டுவ கிராம வைத்தியசாலையும் பிரசவ விடுதியும் | 100 | 600 | | 350 | 350 | 350 | 1,400 | 2,500 | 2,500 | 2,400 | 9,750 | 4,600 |
| மாதம்பை கிராம வைத்தியசாலையும் பிரசவ விடுதியும் | 100 | 800 | | 250 | 250 | 250 | 1,100 | 1,500 | 1,450 | 1,500 | 5,950 | — |
| முந்தல் கிராம வைத்திய சாலையும் பிரசவ விடுதியும் | 100 | 800 | | 550 | 550 | 550 | 2,100 | 1,400 | 1,400 | 1,350 | 5,150 | 1,950 |

7–159—3.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,092

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**5 தொன் நிறையுள்ள 3 இடம்பெயர் பாரம்தூக்கிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்**

| கிடைத்துள்ள கேள்விப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப் பட்ட தொகை |
|---|---|---|
| பதினாறு (16) .. | பிரிட்டிஷ் கிரேன் அண்ட் எக்ஸ்கேவேற்றர் கோப்ப ரேஷன் (வரை) பெரிய பிரித்தானியா (முடிக் குரிய முகவர்க்கூடாக) | ரூபா 272,185.27 (கொழும்பு கப்பற் கேள்வுச் செலவு உட்பட) |

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1964 ம் ஆடு ஜூன் மீ 27 ந வ.

7-244—3.7.64 ந திகதிய வர்த்தமானி இல. 14,092

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1–8–63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியது மான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | சதம் | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... | 30 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... | 60 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.